**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**ஆண்டிறுதிப்பரீட்சை- 2018**

# நாடகமும் அரங்கியலும்

**தரம் 9** **நேரம் : 2 மணித்தியாலம்**

**கவனிக்க:**

1. **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
2. ***1* தொடக்கம் *20* வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் *(1), (2), (3), (4)* என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

## பகுதி 1

1) பண்டைத் தமிழரின் நாடக வடிவம் எது?
1. ஆட்டம் 2. கூத்து 3. நடனம் 4. இசைநாடகம்

2) “சடங்கில் இருந்தே நாடகம் தோன்றியது” என்ற கருத்தினை முன்வைத்தவர்
1. அரிஸ்ரோட்டில் 2. பரதமுனிவர் 3. ஜே. தொம்சன் 4. ஹரிசன்

3) பெரும்பாலும் அரசன், அரசி, மந்திரி போ்னற பாத்திரங்களையும், அரண்மனைக் காட்சிகளையும் கொண்ட நாடகம் எவ்வகையினுள் அடக்கப்படும்
1. சமய நாடகம் 2. சமூக நாடகம் 3. சிறுவர் நாடகம்4. வரலாற்று நாடகம்

4) பின்வருவனவற்றுள் கற்பனைப் பாத்திரமாக அமைவது
1. பேய்கள் 2. மிருகங்கள் 3. மனிதர்கள் 4. பறவைகள்

5) ஈழத்தின் யதார்த்த நாடகத்தின் முன்னோடி?
1. குழந்தை ம. சண்முகலிங்கம் 3. க. கணபதிப்பிள்ளை
2. சி. மௌனகுரு 4. சு. வித்தியானந்தன்

6) யதார்த்த நாடகமாக அமைவது
1. கண்டறியாத கதை 3. அரசனின் புத்தாடை
2. எந்தையும் தாயும் 4. இராவணேசன்

7) உலக நாடக தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது
1. மார்ச் 23 2. மார்ச் 25 3. மார்ச் 27 4. மார்ச் 29

8) வெடியரசன் தலைமை நிலமாக ஆண்டு வந்த தீவு
1. நெடுந்தீவு 2. நயினை தீவு 3. எழுவை தீவு 4. கச்சை தீவு

9) யாழ் பாடிக்கு யாழ்ப்பாணம் எனும் இடத்தினைப் பரிசாக வழங்கிய மன்னன்
1. இராஜசிங்கன் 2. பாலசிங்கன் 3. வாலசிங்கன் 4. வெடியரசன்

10) “சங்கரன் கொடுத்தவாளும் தண்டும் என் கையில் பாராய்..........” என்று அமையும் பாடல் அமையும் நாடகம்
1. இரவணேசன் 2. வாலிவதை 3. கர்ணன் போர் 4. நொண்டி

11) உடற்பயிற்சியாக அமையும் அரங்க விளையாட்டு

1. கோழி கோட்டான்
2. கரடியும் கிராம மக்களும்
3. நாரை நாராய்
4. காகம் உயிர் பெறல்

12) பின்வருவனவற்றுள் சாதி, மத, வர்க்க, நிற இன பேதத்திற்கு எதிராக பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களால் எழுதப்பட்ட நாடகம்

1. சங்காரம்
2. மழை
3. வேடனை உச்சிய வெள்ளைப்புறா
4. தம்பிவந்த தாடியாடு

13) பின்வருவனவற்றுள் வரலாற்று நாடகம் அல்லாதது

1. வெடியரசன்
2. பண்டாரவன்னியன்
3. உறவுகள்
4. உலக நாச்சியார்

14) தமிழ் நாட்டின் தேசிய நாடக வடிவம்

1. கதகளி
2. தெருக்கூத்து
3. கூடியாட்டம்
4. காத்தவராயன் கூத்து

15) "தென்பாங்கு" என்பது எப்பிரதேசத்திற்குரிய கூத்து

1. யாழ்ப்பாணம்
2. மட்டக்களப்பு
3. மன்னார்
4. மலையகம்

16) கூத்தில் சபையோர் எனப்படுவது

1. பார்வையாளரைக் குறிக்கும்
2. கூத்தாடுபவர்களைக் குறிக்கும்
3. வேடஉடை ஒப்பனையாளரைக் குறிக்கும்
4. பிற்பாடகர், அண்ணாவியார், மத்தளஅண்ணாவியார் போன்றோரை உள்ளடக்கிய குழுவைக் குறிக்கும்

17) மன்னார்ப் பிரதேசத்தின் கூத்து மரபின் எழுச்சிக்கு காரணமாய் அமைந்தவர்

1. பூந்தான் யோசேப்பு
2. நாகமணிப் போடி
3. முருகவேள்
4. குழந்தை செபமாலை

18) "பூச்சிகள் அரிக்கும் கண்ணிமை" என்ற பிரபல நாடகத்தை தயாரித்த நாடக நிறுவனம்

1. நாடக அரங்கக்கல்லூரி
2. திருமறைக் கலாமன்றம்
3. செயல்திறன் அரங்க இயக்கம்
4. ஆரோகணா அரங்கக் கல்லூரி

19) சங்கிலி மன்னனின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக சூழ்ச்சிகளை மேற் கொண்டவன்

1. இமையாணன்
2. அப்பா முதலியார்
3. வீரமாப்பாணன்
4. அரசகேசரி

20) அருகிலுள்ள படம் குறிக்கும் நாடகவியலாளர்



1. குழந்தை ம. சண்முகலிங்கம்
2. சி. மௌனகுரு
3. சு. வித்தியானந்தன்
4. க. கணபதிப்பிள்ளை

($20 \times 2 = 40$ புள்ளிகள்)

## பகுதி II

✸ **முதலாம் வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. –
1. ஆற்றுகைக்கலை ஒன்று தருக?
2. திருமறைக் கலாமன்ற இயக்குனர் யார்?
3. குரல்ப்பயிற்சியாக அமையும் அரங்க விளையாட்டு ஒன்று தருக?
4. நாடகத்திற்கான நடிகரை வழங்குபவர் யார்?
5. முதன் முதலாக கூத்துப் புத்தாக்கப் பணியினை மேற்கொண்டவர் யார்?
6. காத்தவராயன் கூத்தின் பிரதான வாத்தியக்கருவி எது?
7. நாகமணிப் போடி அண்ணாவியாரின் பிறப்பிடம் எதுக?
8. “கள்ளத் தோணி” என்ற நாடகத்தின் ஆசிரியர்
9. நீர் அறிந்த இசைநாடகம் இரண்டு தருக?
10. மலையகத்தில் ஆடப்படும் இரு கூத்துக்களைக் குறிப்பிடுக?

02. சங்கிலி நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை இனங்காண்க.

| | | |
|---|---|---|
| நாடகஆசிரியர் | | 1 புள்ளி |
| நாடக வகை | | 1 புள்ளி |
| கரு | | 1 புள்ளி |
| பாத்திரங்கள் | | 3 புள்ளிகள் |
| மோதுகை | | 4 புள்ளிகள் |
| சொல்லாடலின் தன்மை | | 2 புள்ளிகள் |

03. –
1. வகிபாகம் என்றால் என்ன? (3 புள்ளி)
2. வைத்தியர் எனும் பாத்திரத்தின் வகிபாகத்தினை எண்ணக்கருப்படம் மூலம் வரைந்து காட்டுக. (6 புள்ளி)
3. வகிபாகம் ஒன்று மாற்றமடையும் போது வேறுபட்டுக் காணப்படும் அம்சங்களை உதாரணங்களுடன் தருக. (3 புள்ளி)

04. –
1. மோடி என்பது யாது? (3 புள்ளி)
2. மோடிகளின் பிரதான வகைகளைக் குறிப்பிட்டு அவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் நான்கு தருக? (6 புள்ளி)
3. மேலே நீர் குறிப்பிட்ட மோடிகளுக்கு அமைவான நாடகங்கள் தலா மூன்று தருக? (3 புள்ளி)

05. –
1. சித்திரிப்பின் வகைகளைக் குறிப்பிடுக. (4 புள்ளி)
2. மேலே நீர் குறிப்பிட்ட சித்திரிப்பினை விருத்தி செய்யும் பயிற்சியாக வழங்கக்கூடிய அரங்க விளையாட்டுக்கள் ஒவ்வொன்று தருக. (4 புள்ளி)
3. நாடகமொன்றிலே சித்திரிப்பின் பயன்பாட்டினை உதாரணத்துடன் தருக. (4 புள்ளி)

06. –
1. சுதேச வாழ்வியல் சடங்கு 4 தருக? (4 புள்ளி)
2. மேலே நீர் குறிப்பிட்ட சடங்கு ஒன்றில் காணப்படும் முக்கிய செயல்கள் 6 தருக? (6 புள்ளி)
3. வினா இரண்டில் குறிப்பிட்ட சடங்கில் காணப்படும் நாடகப் பண்புகள் 2 தருக? (2 புள்ளி)

07. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
1. அரங்க விளையாட்டு
2. குழந்தை ம. சண்முகலிங்கம்
3. நாடக மோதுகை
4. வசந்தன் கூத்து (4$\times 3 = 12$ புள்ளிகள

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
ஆண்டிறுதிப்பரீட்சை- 2018
நாடகமும் அரங்கியலும்

தரம் 9

## புள்ளித்திட்டம்

### பகுதி 1

| | | | |
|---|---|---|---|
| 01. 2 | 06. 2 | 11. 4 | 16. 4 |
| 02. 3 | 07. 3 | 12. 1 | 17. 4 |
| 03. 4 | 08. 1 | 13. 3 | 18. 3 |
| 04. 1 | 09. 3 | 14. 2 | 19. 2 |
| 05. 3 | 10. 1 | 15. 3 | 20. 4 |

## பகுதி II

01.

1. நாடகம்/நடனம்/இசை/பலே/ஒபேறா/வில்லுப்பாட்டு …………
2. அருட்திரு மரியசேவிய அடிகளார்
3. நாரை நாராய் / கோழி கோட்டான் / குலை குலையாய் முந்திரிக்காய்
4. தயாரிப்பாளர்
5. பேராசிரியர் சு. வித்தியானந்தன்
6. உடுக்கு
7. மட்டக்களப்பு / கன்னங்குடா
8. எம்.எ. அப்பாஸ்
9. அரிச்சந்திரமாயாண காண்டம் / சத்தியவாண்சாவித்திரி / வள்ளி திருமணம் …..
10. காமன் கூத்து, அருச்சுணன் தபசு, பொன்னர் சங்கர்

02.

1. நாடகஆசிரியர் - பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை
2. நாடக வகை – வரலாற்று நாடகம் / யதார்த்த நாடகம்
3. கரு – தேசப்பற்று
   பாத்திரங்கள் - சங்கிலி மன்னன், அப்பா முதலியார், இமையாணன், வீரமாபாணன், புவிராச பண்டாரம், பறங்கியர் ஊர்மக்கள், இராசமாதேவி, வடிவமாகி ………. காக்கை வன்னியன், தொம்பிலிப்பு
   (ஏதாவது 3 பாத்திரங்கள் குறிப்பிடல் வேண்டும்)
4. மோதுகை – அதிகாரப் போட்டி / சங்கிலிக்கும் அப்பா முதலிக்கும் இடையிலான முரண் / நல்லாட்சிக்கும் சூழ்ச்சிக்காரர்களுக்கிடையிலான முரண்
5. சொல்லாடலின் தன்மை – யதார்த்த பாணி, இலக்கிய நடைப்பேச்சு, பேச்சு வழக்கு

03.

1. பாத்திரமேற்றல் என்ற கருத்து வெளிப்படின் புள்ளி வழங்குக.

2.




(மேற் போன்ற உதாரணங்களுக்கு புள்ளிவழங்குக)

3. உடல், உளமாற்றம் - தந்தை, பிரம்மணாக மாறும் போது
வேடஉடை - வைத்தியராக உள்ளவர் தந்தையாகும் போது, சரம் சேட்டு அணிவார்
போச்சுப்பாணி - அலுவலகத்தில் உரையாடுவது போன்று வீட்டில் உரையாடமாட்டார்

(இது போன்று பொருத்தமாக விளக்கியிருப்பின் புள்ளியிடுக.)

04. –

1. நாடகமொன்று ஆற்றுகை செய்யப்படும் முறை / பாணி என்ற கருத்து இருப்பின் புள்ளியிடுக.

2. –

| **யதார்த்தம்** | **யதார்த்தமல்லாத மோடி / விரோதமோடி** |
|---|---|
| ✸ இயல்பான நடிப்பு | இயல்பற்ற நடிப்பு |
| ✸ பேச்சுக்கள் அசைவுகள் வேட உடைகள் வாழ்வை ஒத்திருக்கும் | பேச்சுக்கள், அசைவுகள் வேடஉடை ஒப்பனைகள் மிகைப்படுத்தப்பட்டதாக / குறியீடாக அமையும் |
| ✸ காட்சிகள் இயல்பு | காட்சி இயல்பற்றது |
| ✸ ஆணுக்கு ஆணும் பெண்ணுக்குப் பெண்ணும் வேடம் தாங்குவர் | மாறுவேடம் இரட்டை வேடம் பூணுவர் |

3. –

| **யதார்த்த மோடி நாடகங்கள்** | **யதார்த்த விரோத நாடகங்கள்** |
|---|---|
| எந்தையும் தாயும்<br>பொருளோ பொருள்<br>உறவுகள்<br>ஒரு பாவையின் வீடு<br>செரிப்பழத் தோட்டம்<br>தலைமைக்கட்டடக்காரர்<br>பொருளோ பொருள்<br>தவறான எண்ணம் | கண்டறியாத கதை<br>அரசனின் புத்தாடை<br>விழிப்பு<br>மழை<br>இராவணேசன்<br>அன்னரிக்கனி<br>புதியதொரு வீடு<br>வெண்கட்டிவட்டம் |

(இது போன்று பொருத்தமான 3 இருப்பின் புள்ளி வழங்குக)

05.

1. உடல்வழிச்சித்திரிப்பு
   குரல் வழிச்சித்திரிப்பு
   உணர்வு வழிச் சித்திரிப்பு
   களன்பிய வழிச் சித்திரிப்பு

2. உடற்பயிற்சி – கண்ணாடி / காகம் உயிர் பெறல்
   குரல்ப்பயிற்சி – நாரை நாராய் / கோழி கோட்டான்
   உளப்பயிற்சி – மந்திரக்கடை / குருட்டாட்டோ /கரடியும் கிராம மக்களும்
3. நால்வகையான சித்திரிப்பு வெளிப்பாட்டினையும் உதாரணங்களுடன் விளக்கியிருப்பின் புள்ளி வழங்குக.
   உதாரணம் - கூத்து ஆற்றுகையில் உடல் மற்றும் காண்பியத்தின் பங்கு அதிகம் உண்டு

06.

1. திருமணம், மரண வீடு, காது குத்துதல், நாமகரணம்
   பொருத்தமான 4 இருப்பின் புள்ளியிடுக.
2. பொருத்தமான 6 செயல்கள்
   உ + ம் : திருமணம் - இந்து சமயம்
   கன்னிக்கால் நடுதல்
   கும்பம் வைத்தல்
   பூசை நிகழ்வுகள்
   மணமகன், மணமகள் அழைத்து வரல்
   உடை மாற்றுதல்
   தாலி கட்டுதல்
   தீ வலம்
   அம்மி மிதித்தல் - மெட்டி அணிதல்
   பழம் உண்ணல் இது போன்ற 6 அம்சங்கள்
3. ஆற்றுவோர், ஆற்றப்படுவோர், ஆற்றுகை வெளி
   பின்னணிக்காட்சி – மணவறை
   இசை – தவில், நாதஸ்வரம்
   கைப்பொருள் பொருத்தமான உதாரணத்துடன் கூடிய 2 அம்சங்கள் காணப்பட வேண்டும்.

07. பொருத்தமான நான்கு குறிப்புக்கள் இருப்பின் புள்ளியிடுக.